DiNAMALAR
National Tamil Daily

உலக தமிழர் செய்திகள்

ஜூன் 29,2015 IST

## சிங்கப்பூரில் நோன்பு திறப்பு - சமய நல்லிணக்கப் பெருவிழா

திருச்சி ஜமால் முகமது கல்லூரி முன்னாள் மாணவர் சங்க சிங்கப்பூர் கிளை , பென்கூலன் பள்ளிவாசலில் ஜூன் 27 ம் தேதி , நோன்பு திறப்பு - சமய நல்லிணக்கப் பெரு விழாவை மிகச் சிறப்பாக நடத்தியது . சிங்கப்பூர் அரசு கலாசார , சமூக , இளையர் துறை அமைச்சர் லாரன்ஸ் வோங் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டார் . அவர் தமதுரையில் , " நோன்பு திறப்பு நிகழ்ச்சிகள் , நம் சமூக உறவுகளை மேம்படுத்துவதுடன் , அனைவரும் ஒன்றுபட்ட பல இன சமூகமாகத் திகழவும் உதவுகிறது " என்றார் .சிண்டாவுடன் இணைந்து பின்தங்கிய மாணவர்களுக்கான இலவச கணிதப் பட்டறைகளை நடத்தும் இச்சங்கத்தின் திறன்மிகு சேவையை வெகுவாகப் புகழ்ந்துரைத்தார் . சிங்கப்பூரில் உள்ள ஜாமியா இல்லத்தில் வசிக்கும் 68 ஆதரவற்ற குழந்தைகளுக்குப் புத்தாடை வழங்கியதையும் அமைச்சர் பாராட்டினார் . சங்கத் தலைவர் கணக்காய்வாளர் முஹியத்தீன் அப்துல் காதர் வரவேற்புரை ஆற்றினார் .எம் . ஈ .எஸ் . குழும தலைவர் எஸ். எம். அப்துல் ஜலீல் அமைச்சருக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார் . தமிழர் பேரவைத் தலைவர் டாக்டர் தேவேந்திரன் நினைவுப் பரிசு வழங்கிச் சிறப்பித்தார் . பரீஜ் முகமது இறை வசனங்களை ஓதினார் . நிகழ்வில் , வளர் தமிழ் இயக்கத் தலைவர் ராஜாராம் ,சிண்டா தலைவர் பரதன் , தமிழ் மொழி பண்பாட்டுக் கழகத் தலைவர் மு. ஹரிக்ருஷ்ணன் , சிங்கைத் தமிழ் சங்கத் தலைவர் அ. வை . கிருஷ்ணசாமி ,சிங்கப்பூர் கடைய நல்லூர் முஸ்லீம் லீக் தலைவர் நசீர் கனி , மசூது மற்றும் சிங்கப்பூரில் உள்ள முஸ்லீம் அமைப்புகளின் தலைவர்கள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்து கொண்டனர் . செயலவை உறுப்பினர் அமானுல்லா நிகழ்வினைச் சுவைபட நெறிப் படுத்தினார் . அப்துல் நசீர் நன்றி நவில விழா இனிதே நிறைவு பெற்றது .- ***நமது செய்தியாளர் வி புருஷோத்தமன்***








"SHOW US THE RIGHT PATH"
JAMAL MOHAMED COLLEGE



